பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி
சென்னை – 4

*04-08-2025 MONDAY 6.30 PM*

## மாநிலச் செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

1. இங்கிலாந்துக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 6 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை சமன் செய்தது.

2. இளையோர் நலனை கருத்தில்கொண்டு அடுத்த 5 ஆண்டுகளில் நான்கு கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. தமிழகத்தில் 500 மாதிரி பள்ளிகள் ஏற்படுத்தப்பட உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. சொத்துவரி மற்றும் மின்கட்டண உயர்வால் அனைத்துத்தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. தமிழகத்தில் ஆணவக்கொலைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சென்னை உயர்நீதிமன்றம் வேதனை தெரிவித்துள்ளது.

-- இனி விரிவான செய்திகள்

<<<<<<>>>>>

**இங்கிலாந்துக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 6 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.**

**லண்டனில் நடைபெற்ற இப்போட்டியின் கடைசி நாளான இன்று, 374 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடும், 6 விக்கெட் இழப்பிற்கு 339 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடனும் இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து 367 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.**

**Harry Brook 111 ரன்னுக்கும், Joe Root 105 ரன்னுக்கும் ஆட்டமிழந்தனர்.**

**முகமது சிராஜ் அபாரமாக பந்து வீசி, கடைசி விக்கெட்டை வீழ்த்தினார்.**

***(Sound Byte – வெற்றித்தருணம் – 22 Sec.)***

***இப்போட்டியின் முதல் இன்னிங்சில் 4 விக்கெட்டுகளையும், இரண்டாவது இன்னிங்சில் 5 விக்கெட்டுகளை வீழ்த்திய முகமது சிராஜ் ஆட்ட நாயகனாகவும் அறிவிக்கப்பட்டார்.***

***ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரில் இரு அணிகளும் தலா 2 ஆட்டங்களில் வெற்றிபெற்றன. ஒரு போட்டி டிரா ஆனது.***

<<<<<<>>>>>

*பிரதமரின் வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம், கடந்த 16 மாதங்களில் மட்டும் 11 லட்சம் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய* ***தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.***

***மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், கடந்த பத்தாண்டுகளில் 17 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.***

***பிரதமரின் வளர்ச்சியடைந்த இந்தியா வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், அடுத்த ஐந்தாண்டுகளில் 4 கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.***

***இதற்காக 2 லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.***

<<<<<<>>>>>

*தொழில் வளர்ச்சியில் தமிழகம் முன்னணியில் உள்ளதாக தொழில்துறை அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா கூறியுள்ளார்.*

*இன்று தூத்துக்குடியில் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.*

*வாகன உற்பத்தித்துறையில் தூத்துக்குடி அடுத்த ஐந்தாண்டுகளில் மிகப்பெரிய வளர்ச்சியை எட்டும் என்றும் திரு டி ஆர் பி ராஜா தெரிவித்தார்.*

<<<<<<>>>>>

தமிழகத்தில் 500 அரசு மாதிரி பள்ளிகளை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

இன்று நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஊராட்சி ஒன்றியங்களில் இந்த மாதிரிப் பள்ளிகள் ஏற்படுத்தப்படும் என்றார்.

*(Voice Byte – அன்பில் – 44 Sec.)*

<<<<<<>>>>>

விவசாயிகளின் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்பட்டு வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்

இன்று நெல்லையில் விவசாயிகள், வியாபாரிகள் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்களுடன் அவர் கலந்துரையாடினார்.

அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் விவசாயிகள் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

வேளாண் கடன்களை கூட திமுக அரசு வழங்கவில்லை என்றும் திரு எடப்பாடி பழனிசாமி குறை கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் மக்கள் ஆட்சிமாற்றத்தை விரும்புவதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இன்று விருதுநகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் குற்றச்சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக கூறினார்.

சொத்துவரி மற்றும் மின்கட்டண உயர்வால் அனைத்துத்தரப்பினரும் பாதிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

தமிழகத்தின் வளர்ச்சிக்கு பிஜேபி தலைமையிலான மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் அவர் கூறினார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் ஆணவக் கொலைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வேதனை தெரிவித்த சென்னை உயர்நீதிமன்றம், கடலூர் கல்லூரி மாணவர் மரணம் குறித்த வழக்கினை சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவை விசாரணை செய்த நீதிபதி திரு வேல்முருகன் இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தார்.

இவ்வழக்கு தொடர்பான ஆவணங்களை இரண்டு வாரங்களுக்குள் சிபிசிஐடி-க்கு ஒப்படைக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte – செந்தாமரை கண்ணன் – 63 Sec.)*

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியில் நேரடி நெல்கொள்முதல் நிலையங்களை மாநில அமைச்சர் திரு நாசர் இன்று திறந்துவைத்தார்.

----------------

மதுரை மாவட்டம் கன்னிக்குடி கண்மாயில் தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டுவரும் தூர்வாரும் பணிகளை மாநில அமைச்சர் திரு மூர்த்தி இன்று ஆய்வு செய்தார்.

-------------------

*வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கான சிறப்பு ஊக்கத்தொகை அவர்களின் வங்கிக்கணக்கில் செலுத்தப்பட்டுள்ளதாக ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி கூறியுள்ளார்.*

---------------

*புதுக்கோட்டை மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திருமதி அருணா அறிவுறுத்தியுள்ளார்.*

---------------

*விழுப்புரம் தலைமை அஞ்சல் அலுவலகத்தில் மேம்படுத்தப்பட்ட அஞ்சல் தொழில்நுட்ப சேவையை துணை கோட்ட கண்காணிப்பாளர் திரு ஆனந்த் யுவராஜ் இன்று தொடங்கிவைத்தார்.*

--------------

*சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை வைத்திருந்த ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.*

*<<<<<<>>>>*

*விளையாட்டுச் செய்திகள்*

***17 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Sitender தங்கப்பதக்கம் வென்றார்.***

***கிரீஸின் ஏதென்ஸில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் 60 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.***

-------------

*ஆசிய இளையோர் குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் Bhawna Sharma, Yatri Patel அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.*

*பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின், 22 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் 48 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் Bhawana Sharma - வியட்நாமின் Ngoc Linh Chi Ngo-வை வென்றார்.*

*மகளிர் 57 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் Yatri Patel – இலங்கையின் கீர்த்தனா உதயகுமாரை வென்றார்.*

*-------------*

*பிரேஸிலில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manush Shah – Diya Chitale இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.*

*-------------*

*ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்கு ஹாக்கிப்போட்டிகளில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.*

*ஹர்மன் பிரீத் சிங் தலைமையிலான இந்த அணியில் 24 பேர் இடம்பெற்றுள்ளனர்.*

*முதலாவது போட்டி பெர்தில் வரும் 15-ஆம் தேதி நடைபெறவுள்ளது.*

*<<<<<<END>>>>*